# மயிலிறகின் முத்தம்



ஆரிசன்

# மயிலிறகின் முத்தம்

## ஆரிசன்

**ஆசா பதிப்பகம்**
1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர்
கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்
வந்தவாசி வட்டம் – 604 403
திருவண்ணாமலை மாவட்டம்
94423 11118.

**மயிலிறகின் முத்தம் (ஹைக்கூக் கவிதைகள்)**

□ ஆசிரியர் : **ஆரிசன்**

□ உரிமை : © ஆசிரியருக்கு

□ பொருண்மை : கவிதை □ அளவு : டெம்மி

□ முதல் பதிப்பு : ஆகஸ்டு 2012, இரண்டாம் பதிப்பு : ஜூன் 2025

□ **ஆசா பதிப்பகம்**
சாவித்திரி ஆரிமுத்து இல்லம்
1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர், கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்
வந்தவாசி வட்டம் – 604 403, திருவண்ணாமலை மாவட்டம்
94423 11118.

□ ஒளி அச்சு : **ஜோதி பதிப்பகம்**
எண் : 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு,
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037. கைபேசி : 9940190616

Pages : 52 Rs. : 60/-

**Mailiragin Muttham (Hykko Kavithaikal)**

# Author : **Arison**

# Copy Right : © Author

# Subject : Poetry # Book Size : D/S

# First Edition : August 2012, Second Edition : June 2025

# Publication : **Aasha Publication**
Savithiri Arimuthu Illam
1126 / 2, MGR Nagar, Keezhkkodungalur Post
Vanthavasi Taluk, Thiruvannamalai D.T.

Layout & Printing : **JOTHI PUBLICATIONS**
No. 2/1067, 11th Street, 2nd Cross Street
Mugappair West, Chennai - 600 037.

## சமர்ப்பணம்

தமிழ்கூறும் நல்லுலகில்

முதல் ஹைக்கூ கவிதைத்

தொகுப்புத் தந்தவரும்

ஹைக்கூ மனதோடு

வாழ்ந்து வருபவருமான

புள்ளிப்பூக்கள், ஓவியக்கவி

அமுதபாரதி  அவர்களுக்கு....

# நன்றி...

பேரா. இராம குருநாதன்

பேரா. மித்ரா

பொன். குமார்

பூங்குயில் சிவகுமார்

கவிதை உறவு

வண்ணக் கதிர்

புதுகைத் தென்றல்

அருவி

ஏழைதாசன்

கவிஓவியா

மின்மினி

பொதிகை மின்னல்

மனித நேயம்

# இன்னும் பாடுக பாட்டே....!

-----------------------------------------------------

*ஹைகூ கவிதைகள் மக்கள் தொகையைப் போலப் பெருகிவிட்டன. அவ்வடிவத்தையும், உட்பொருளையும் கைவரப்பெற்றவர்கள் தொகை குறைவே. அதனால் இப்பொழுது தைக்கும் அளவிற்கு ஹைகூ வடிவம் சிதைந்து கொண்டு வருகிறதோ என்ற ஐயம் எழுகிறது. இருப்பினும் சிலர் அதன் செவ்வி தலைப்படுபவர்களாக இருந்து அவ்வடிவத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர் கவிஞர் ஆரிசன். முன்பே இவர் இவ்வடிவக் கவிதைகள் படைத்துப் பரிசும் பெற்றிருக்கிறார்.*

*அவர் படைத்தளித்துள்ள இந்த நூல் பெரும்பாலும் குழந்தைகளை மையமிட்டு எழுதப்பட்டுள்ளது. சிலர் குழந்தைகளை மட்டுமே பாடுபொருளாக்கி ஹைகூ நூல்களை எழுதியுள்ளனர். ஆரிசன் துடிப்போடு ஹைகூ கவிதைகளில் உலா வருபவர். நூலின் முதற்கவிதையிலேயே நம்மை வசப்படுத்தி விடுகிறார்.*

**பசியோடு குழந்தை**
**பால் வடியும்**
**ரப்பர் மரம்.**

*மழலையின் நெஞ்சில் எண்ணங்கள் இருக்கும். அதை வெளிப்படுத்தத் தெரியாமல் தவிக்கும். இதனை,*

**மொழிபெயர்க்கத் தெரியாமல்**
**தவிக்கிறது குழந்தை**
**கனவு**

*என்ற கவிதை கூறுகிறது.*

*ஏழ்மைத் தாயின் இதயம் கனிய முத்தம் கொடுக்கும் குழந்தையைப் படம் பிடிக்கிறது இன்னொரு கவிதை,*

**வறண்ட கன்னத்தில்**
**தேன்ரசம்**
**மழலை முத்தம்**

*தாலாட்டு இப்போதெல்லாம் பாடப்படுவதில்லை. இன்றைய தாய்களுக்கும் அது தெரியவும் தெரியாது. அம்மாக்களைத் தூங்க வைத்துவிட்டு வேடிக்கை பார்க்கும் குழந்தைகளும் உள்ளன. தாலாட்டை மறந்த தாய்மார்கள் ஒரு புறம்! குழந்தைகளும் தூளியை விட்டிறங்கி வேடிக்கை பார்த்துவிழிப்பது மறுபுறம்! குழந்தை தூங்குகிறதோ இல்லையோ, தூளியை ஆட்டிக்கொண்டே தாய் தூங்கிவிடுவதுண்டு கவிஞர் காட்டுவது வேறொரு காட்சி.*

**தாயின் தாலாட்டில்**
**தூங்கிப் போனது**
**தூளி**

*என்கிறார். இதனை மாற்றுப் பார்வையில் வடிக்கிறது இது தொடர்பான இன்னொரு கவிதை.*

**ஊஞ்சலில் அம்மா**
**தாலாட்ட முயல்கிறது**
**குழந்தை**

*கோபுரங்களுக்குச் சிலை மட்டுமா அழகு? பறவைகள் உறைகின்றதாலும் அழகுதான் பறவைகளின் கூடின்றிக் கோபுரங்கள் அழகிழக்கின்றன. இதனைத் தெரிவிக்கிறது ஒரு கவிதை*

**பறவைக் கூடின்றிக்**
**களையிழந்து போனது**
**கோபுரம்**

*கரப்பான் பூச்சியின் உணர்ச்சி கவிஞர்க்குத் தெரியும் போலும். அதனையும் ஒரு கவிதையில் இடம் பெறச் செய்துள்ளார் கவிஞர்.*

**மீசை சுழற்றி**
**மகிழ்ச்சி தெரிவித்தது**
**கரப்பான் பூச்சி**

*இன்றைய நாட்டு நிகழ்வில் சாதியம் சாதித்தது என்ன? நாட்டில் ஒழிக்க முடியாதது கொசுவும், ஊழலும் என்றால் அவற்றில் சாதியும் சேர்ந்து இடம்பிடிக்கிறது. பூதாகாரமாய் உலா வருவது சாதிதான். சாதிய அரசியல் எத்தனை காலம்தான் மக்களை ஏமாற்றி வருகிறது. சாதிய வெறி கொண்டு அலையும் மக்கள் திருந்துவதற்கு எத்தனை பெரியார்கள் வந்தாலும் முடியாது. சாதியால் இரத்தக் களரி நடக்கிறது. இதனை உணர்த்தும் வகையில் ஒரு கவிதை.*

**சொட்டும் ரத்தத்தில்**
**குளிர்காய்கிறார்கள்**
**சாதி அரசியல்**

*சில கவிதைகளை ஆழ்ந்து ஆய்ந்து பார்க்கும்படி உள்ளன. அவற்றிற்குத் திருத்தம் தேவை. உதாரணத்திற்கு,*

**சோலைக்குள்**
**பூந்தொட்டி வளர்கிறது**
**கரு**

*இக் கவிதையை,*

**சேலைக்குள்**
**பூந்தொட்டி வளர்கிறது**
**கரு**

*என்று சொல்லியிருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். விடுகதை உணர்வைப் புலப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளன சில கவிதைகள். உதாரணத்திற்கு.*

**வீதியில் கொளுத்திப் போட்டனர்**
**ஊர் முழுக்க**
**புரளி**

*இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம் ஆரிசன் ஹைகூ கவிதைகளைப் பற்றி! அவர் இன்னும் பல ஹைகூகளை எழுதவேண்டும். அவருக்கு வாழ்த்துகள்.*

– பேராசிரியர் இராம. குருநாதன்
பேச : 94440 43173

# அணிந்துரை

**பேராசிரியர் மித்ரா**

மொழி, மனித உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் ஊடகம். அதுவே மானிட சமுதாயத்தை வளப்படுத்தி மேன்மையுறச் செய்கின்றது. மொழி வளர்ச்சியே அந்நாட்டின் வளர்ச்சி எனலாம். அத்தகைய மொழியை கவிதை உயர் நிலைக்குக் கொண்டு செல்கிறது. கவிஞன் தன் அனுபவங்களைக் கவிதைகளில் பதிவு செய்கிறான். தனது அனுபவங்களையும் பிறர் அனுபவங்களையும் பிறர் பகிர்ந்து கொள்ளுமாறும் செய்கின்றான்.

இத்தொகுப்பில் கவிஞர் ஆரிசன் பெரும்பகுதி குழந்தைகள் விளையாடும் பூங்காவாகவே கவிதைகளைப் புனைந்துள்ளார். அவரே மடலில் குறிப்பட்டது போல் குழந்தைகள் குறித்தான ஹைகூக்களே அதிகம் என்று வாசிப்போர் உணரலாம். குழந்தைகள் பற்றிய உண்மைகளை, உணர்வுகளைக் கவிஞர் பதிவு செய்துள்ளார். குழந்தையின் செயல்பாடுகள் யதார்த்தம் வெளிப்படும் வகையில் ஹைகூக்களில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள் முதன்முதலாக நடக்க முயலும் போது நடைவண்டியில் நடைபழக்குவர். குழந்தைகள் நடை வண்டியைப் பிடித்து மெல்ல பிஞ்சுபாதங்களைப் பதித்து அடி எடுத்து வைக்கையில் மனம் மகிழும். அது மெல்ல மெல்ல நடைவண்டி ஓட்டிப்பழகும். அந்த அழகை,

**எட்டி அடிவைத்து**
**மகிழச் செய்தது குழந்தை**
**கையில் நடைவண்டி**

*என்று கவிதை ஆற்றியுள்ளார் கவிஞர்.*

*தாலாட்டு ஒரு பறவை. அது தாலாட்டைத் தன் குஞ்சுப் பறவைக்குப் பாடும். குஞ்சுப்பறவை வளர்ந்து தாயிடம் கேட்ட அதே தாலாட்டைத் தன் குஞ்சுகட்கும் பாடும். இவ்வாறு வழி வழியாகப் பரம்பரைப் பரம்பரையாக தாலாட்டு காற்றுள் கலந்து ஒலிக்கிறது. தாயின் நாக்கு அசையும் வரை தாலாட்டு ஒலித்துக் கொண்டே இருக்கும். அந்த மந்திர, மயக்கும் சக்தி வாய்ந்த தாயின் தாலாட்டைக் கேட்டு குழந்தை உறங்கிவிடுகிறது. ஆனால் தூளி மட்டும் தாலாட்டு இசையைக் கேட்டுக்கொண்டே உறங்காமல் அசைபோடும் அரிய நிகழ்வை, தாலாட்டு இசையில் குழந்தை மட்டுமல்ல உயிரற்ற அஃறிணைப் பொருள்களும் மயங்குவதை ஆரிசன் குறிப்பிடும்போது,*

**தூங்கும் மழலை**
**இசையோடு ஆடியது**
**தூளி**

*என்பதனால் அறியலாம்.*

*சில சமயம் தூளியில் குழந்தையைத் தூங்கவைக்க தாய்க்கு நேரம் காலம் கிடைக்காது. அவசரத்தில் குழந்தையைத் தன் தோள் மீது தூங்க வைத்து தாலாட்டுவாள். அந்தத் தாயின் தாலாட்டு ஸ்பரிசத்தை நுகர்ந்த வண்ணம் தூங்கிப்போகும். அந்த யதார்ந்த நிகழ்வைக் கவிஞர்,*

**தோள் மீது தூங்கும்**
**குழந்தைக்குத் தெரிகிறது**
**அம்மாவின் தாலாட்டு**

*என்று கவிதையாக்கியுள்ளார்.*

*தாலாட்டுக் கவிதை மரபில் இவை ஒரு புதிய யுத்தி. தாலாட்டில் அழகிய ஹைகூ வடிவத்தைக் கொண்டு வந்த கவிஞரின் திறம் பாராட்டத்தக்கது.*

*தாய்ப்பால் குழந்தைக்கு நோய்த்தடுக்கும் ஆற்றலைத் தருகிறது. உலகில் கலப்படமில்லாத தூய்மையான பால் தாய்ப்பால் மட்டுமே. குழந்தைக்கு எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டது. அதில் தேவையான அளவு இரும்புச் சத்தும் சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால் இரத்த சோகையைத் தடுக்கும் ஆற்றலும் எலும்புகள் திடமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் குழந்தைக்கு இத்தகைய மகிமை வாய்ந்த தாய்ப்பால் பற்றிய ஆரிசனின் கவிதை,*

**விளம்பரத்தில் வராமலே**
**வீர்யமாய் வளர்ந்தது மழலை**
**தாய்ப்பால்**

*என்பதாகும்.*

*நினைவுகளின் தொடர்ச்சி கனவு. பகல் முழுதும் குழந்தை ஆடி, ஓடி, விளையாடி களைத்து இரவில் தூங்கிவிடும். பகல் முழுதும் நிகழ்ந்த நிகழ்வுகளை குழந்தை மனம் தூங்கும்போதும் அசை போடும். உடல் அயர்ந்து தூங்கினாலும் சிலநேரம் உள்ளம் விழிப்பு நிலையில் இருக்கும். குழந்தைக்கு தான் கனவில் கண்ட கனவினை விரித்துரைக்க இயலாமல் தவிக்கும் தவிப்பை அனுபவ நிலையில் உணர்ந்து கவிதை ஆக்கியுள்ளார் கவிஞர் ஆரிசன்.*

**மொழி பெயர்க்கத் தெரியாமல்**
**தவிக்கிறது குழந்தை**
**கனவு**

*இன்னும் இத்தொகுப்பில் ஜனனத்தில் வளர்ந்து சிரிக்கும் குழந்தை. சிறுநீர் கழித்து சிரித்த குழந்தை, தேனை மிஞ்சும் மழலையின் முத்தம், நோய்க்கு மருந்து சொல்லும் குழந்தை. நாட்காட்டியில் சிரிக்கும் குழந்தை, மலடிப்பட்டம் போக்கிய குழந்தை, வானவில் பார்த்து அமைதியான குழந்தை,*

எழுத்துக்களைச் சொல்லமுடியாமல் தவித்த குழந்தை, மழைநீரில் விளையாடி இரசித்த குழந்தை, கருப்பையை புனிதமாக்கியக் குழந்தை, அப்பா, அம்மா விளையாட்டில் அன்பைக் காட்டிய குழந்தை, அழுது உண்ட குழந்தை, பொம்மைக் கல்யாணம் நடத்தி வாழ்த்திய குழந்தை, மழலைப் பேச்சு, கசக்கும் மழலையற்ற வீடு, பறவைகளை சைகையால் அழைத்த குழந்தை, சொப்பு விளையாட்டு விளையாடும் குழந்தைகள், சுட்டி குழந்தை, குழந்தைகளோடு தொடர்புடைய பள்ளிக் கூடம், முட்டை, சாப்பாட்டு வண்டி, சத்துணவு, வகுப்பறை, ஆட்டோ கல்வி, குழந்தை விளையாட்டு, பிரம்பு, ஆரம்பக் கல்வி இவையெல்லாம் ஹைகூவுக்கு பாடுபொருட்களாக ஆகியுள்ளதை அறியலாம்.

மேலும் உப்பு மூட்டை தூக்கச் சொல்லும் குழந்தை, குழந்தையின் கரங்களை முத்தமிடும் தாய் என்னும் வகையில் நூலில் ஹைகூவாக மலர்ந்துள்ளன. நூல் முழுக்க பெரும்பான்மையான ஹைகூக்கள் குழந்தைகளைப் பற்றிய அனுபவ, யதார்த்த, எளிய ஹைகூக்களாகவே உள்ளன.

நூலில் இன்னொரு பிரிவு இயற்கையைப் பற்றிய ஹைகூக்களாக வந்துள்ளன. சங்க காலம் தொட்டே கவிஞர்கள் இயற்கையில் மன உணர்வுகளை ஏற்றிக் கூறியுள்ளனர். இவ்வுணர்வு அவர்களது இயல்பு. இயற்கையோடியைந்து வாழ்ந்த அவர்களால் இயற்கையிலிருந்து வேறுபடுத்த முடியாது. இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். இயற்கையில் நிகழும் இயல்பான செயல்களுக்கு மனிதமனம் காரண காரியம் கண்டுபிடித்து தொடர்பு கொள்ள செய்துவிடுகிறது இயற்கை. கண்ணுக்கு விருந்தளிக்கும் ஆற்றல் பெற்றது.

மழை நின்ற பின்பு ஏழு வண்ணங்களைக் குழைத்து வானத்துக்கு வளைவு அமைத்துக் கொடுக்கும் வானவில், அழும் வானம், மழை வெள்ளம், முள் தைத்தும் வலிக்காமல் ஓடும் நதி, புகை மூட்டத்தில் கொட்டாவிவிட்ட நதி, உச்சரிக்க முடியாத இடி, மலைகளை ஆக்கிரமித்த பனிமூட்டம், தோட்டத்து மின்மினியால் நிகழ்ந்த செயல்பாடு, கிட்ட வந்து

*சிரித்த மழை, ஞாபகங்களோடு நின்ற மலை, ஆகியவை ஹைக்கூக்களாக நூலில் காணக்கிடக்கின்றன.*

*ஜப்பானிய ஹைக்கூக்களில் இயற்கையும், ஜென்னும் இணைந்து கிடக்கும். சமுதாயச் சிந்தனைகள் ஓரளவே இடம் பெற்றிருக்கும். ஆனால் நம் ஹைக்கூக் கவிஞர்கள் இயற்கையையும் ஜென்னையும் அதிகமாகப் பாடுவதைத் தவிர்த்து சமுதாயத்தை அதிகம் பாடி வருகின்றனர். ஆரிசனும் சமூக சிந்தனை மேலோங்க சில கவிதைகளை நூலில் இடம் பெறச் செய்துள்ளார்.*

*இன்று எல்லாம் உலக மயமானதால் நாடு அனைத்து நிலைகளிலும் நைந்து போன அவல நிலையை*

**தாயின் கருப்பை**
**கிழிந்து போக சிரிக்கிறது**
**உலகமயம்**

*என்று படம் பிடித்துக் காட்டியுள்ளார். இன்று உலகில் தனியார் மயமும் உலக மயமும் வந்த பின்பு உள்நாட்டுத் தொழில்கள் நைய்ந்து இந்திய தேசம் நிலை குலைந்து விட்டது. நாட்டில் எங்கும் எதிலும் ஊழல் பல்கிப் பெருகிவிட்டது. பாரதி பாடிய பாடல் கவி மனதில் சோக உணர்வைத் தோற்றுவித்து வெளிப்படையாகச் செய்துவிட்டதை,*

**பாரத தேசம்**
**பழும் பெரும் தேசம்**
**ஊழல் பெருச்சாளிகள்**

*என்னும் ஹைகூவால் அறியலாம்.*

*அனுபவத்தால் கண்ட உண்மையை, வாழ்வின் வெற்றி ரகசியத்தை, சேமிப்பின் அவசியத்தை நன்குணர்ந்து சொல்லும் வைர வரிகள்,*

**வாழ்வின் வெற்றியை**
**செதுக்கியது**
**சேமிப்பு**

*என்பன.*

*கவிஞர் ஆரிசனின் முதல் மூன்று தொகுப்புகளைக் காட்டிலும் இத்தொகுப்பு வித்தியாசமானது. எண்பது சதவீதம் குழந்தைகளைப் பற்றிய ஹைகூக்களைக் கொண்டது இத்தொகுப்பு. இக்கவிதைகளைப் படிப்போர் தங்கள் வீட்டுக் குழந்தைகள் செய்த செயல்பாடுகளையும், குறும்புகளையும் உணர நேரலாம். மழலை இன்பம் எத்தனை இனிமையானது, அதனால் பெண்கள் எய்தும் உயர்ந்த பேறுகளையும் உள்ளது உள்ளபடி சிறிதும் மிகையின்றி எளிமையாகக் கவியாற்றிய குழந்தை ஹைகூ கவி ஆரிசனை வாழ்த்துகின்றேன்! இவர் வாழ்வில் எல்லா பேறுகளையும் பெற இன்னொரு முறை வாழ்த்துகின்றேன்.*

என்றென்றும் அன்புடன்,
மித்ரா
பேசி : **98654 16602**

## கவிஞர் ஆரிசனின் ஹைக்கூ பயணம்....

இலக்கியத்தில் பல வகைகள் உண்டு. குழந்தைப் பாடல்கள் வகையில் ஒரு வகை. இதிலும் இரண்டு வகை உண்டு. ஒன்று குழந்தைகளுக்காக பாடுவது. இரண்டாவது குழந்தைகளே பாடுவது. குழந்தைகளுக்காக பாடியது ஒரு காலம். குழந்தைகளையே பாடும் கலை சமீபங்களில் நீள்கிறது. பள்ளிக் குழந்தைகளை மையப்படுத்தி கவிஞர் பழ. புகழேந்தி தந்த தொகுப்பு, "கரும் பலகையில் எழுதாதவை". வீட்டுக் குழந்தைகளை பாடு பொருளாக்கி "இனிது" என்னும் தொகுப்பை பொன். குமார் எழுதியுள்ளார். குழந்தைகளின் பிரபஞ்சத்தை முன் மொழியும் விதமாக உள்ளது. விஷ்ணுபுரம் சரவணனின் "ஓவியத்தில் பறக்கும் வண்ணத்துப்பூச்சி". வளர்ந்த குழந்தையின் மனநிலையைக் காட்டுகிறது. கு.ரா.-வின் "குழல் + யாழ் = குழந்தை". இத் தொகுப்புகள் எல்லாம் புதுக்கவிதை களால் இடம் பெற்றதாகும். ஹைக்கூவிலும் இம் முயற்சி தொடர்ந்துள்ளது. குழந்தைகளை ஹைக்கூக்களால் படம் பிடித்துக்காட்டி "சிரிப்பின் முகவரி" என்றார் ந.க. துறைவன். குழந்தைகளைப் பெரியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் வசீகரன் "குட்டியூண்டு" என்னும் தொகுப்பை அளித்துள்ளார். புதுக்கவிதை, ஹைக்கூ, குழந்தைப் பாடல்கள் என்னும் தளங்களில் இயங்கி வரும் கவிஞர் ஆரிசனும் ஹைக்கூவில் குழந்தைகளைப் பாடியுள்ளார். "நனைதல் நன்று" என்னும் தொகுப்பினை இப்போது தந்துள்ளார்.

நிலவு நாள் பட மெல்ல மறைந்து வருவதும் பின்னர் வளர்ந்து வருவதும் இயல்பு. இயற்கை. மக்கள் தேய்பிறையை

*விரும்புவதில்லை. தேய்பிறையில் எக்காரியத்தையும் செய்வதில்லை. தேய்பிறையில் பிறந்த குழந்தை வளரவேச் செய்யும் என்கிறார்.*

**தேய்பிறையில் ஜனனம்**
**வளர்ந்து சிரிக்கிறது**
**குழந்தை**

*குழந்தையைக் காட்டியதுடன் தேய்பிறையின் மீதிருந்த களங்கத்தைப் போக்கியுள்ளார். தேய்பிறையில் தொடங்கினால் காரியம் தடைபடாது என்கிறார். மூட நம்பிக்கையைத் தகர்த்துள்ளார்.*

*குழந்தை வளர்ப்பு என்பது ஒரு நல்ல கலை. ஓர் இனிய அனுபவம். நுணுக்கமாக கவனித்தால் வளரும் குழந்தையிடம் மாற்றம் தெரியும். மல்லாந்து படுத்திருந்த குழந்தை கவிழத் தொடங்கி பின் தவழ்ந்து தடுமாறி எழுந்து நின்று மெல்ல அடி எடுத்து வைக்க முயற்சிக்கும். குழந்தை வளர்ச்சியில் முக்கிய கட்டம் இது.*

**எட்டி அடி வைத்து**
**மகிழச் செய்தது குழந்தை**
**கையில் நடை வண்டி**

*குழந்தை மெல்ல நடக்கத் தொடங்கியதும் பெற்றோரிடம் ஒரு மகிழ்வு ஏற்படும். கவிஞர் இந்த ஹைக்கூ மூலம் தன் மகிழ்வை வெளிப்படுத்தியுள்ளார். வாசிப்பவரையும் மகிழ வைத்துள்ளார்.*

*நோய்க்குப் பல காரணம். முதன்மையானது உடல் உழைப்பு இல்லாதது. போதிய பயிற்சி கிடையாதது. முதியோர்களையே நோய் வாட்டி வதைக்கிறது. ஆட்டிப் படைக்கிறது. குழந்தைகளை நோய் பெரும்பாலும் நெருங்கு வதில்லை. காரணம் அது "ஓடி விளையாடு" வதே ஆகும்.*

**நோய்க்கு மருந்தை**
**குழந்தை சொன்னது**
**ஓடி விளையாடு**

குழந்தையை ஒரு மருத்துவராகக் காண்பித்துள்ளார். அனைவரையும் "ஓடி விளையாடு" என்கிறார். "ஓடி விளையாடு" பாப்பா எனப் பாரதி பாடியது நினைவிற்கு வருகிறது.

பெண்ணிற்குப் பல பருவங்கள் உண்டு. ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. தாய்மை என்பது மிக முக்கியமானது. எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஒரு பெண்ணுக்குப் பெருமையே தாய்மை அடைவதேயாகும். தாய்மை என்னும் பட்டத்தை அளிப்பது குழந்தையேயாகும்.

**அம்மாவை உச்சரித்து**
**கருப்பையைப் புனிதமாக்கியது**
**குழந்தை**

அம்மா என்று குழந்தை தாயை அழைக்கும் போதே கருப்பைப் புனிதமடைகிறது என்கிறார். ஒவ்வொரு பெண்ணுக்கும் குழந்தை அவசியம் என்கிறார். குழந்தையே ஒரு பெண்ணை முழுமையடையச் செய்கிறது என்று குழந்தையை பெருமையடையச் செய்கிறார். குழந்தையைப் போற்றுகிறார்.

**தூங்கும் மழலை**
**இசையோடு ஆடியது**
**தூளி**

என்பது ரசிப்பிற்குரியது.

**விரல் சூப்பி**
**பசியாறியது மழலை**
**அலுவலில் தாய்**

என்பது சிந்தனைக்குரியது.

குழந்தைகள் குறித்த ஹைக்கூக்கள் அடங்கிய இத் தொகுப்பில் சில ஹைக்கூக் குழந்தைகளும் உள்ளன. பொதுவான தளத்திலும் இயங்கியுள்ளன.

**வெள்ளமின்றி**
**தெருவில் நிற்கிறது**
**காகிதக் கப்பல்.**

என்பது பொதுவானது. குழந்தைகளுக்காக எழுதியதாகவும் உள்ளது. மழை வந்தால் வெள்ளம் வரும். வெள்ளம் வந்தால் குழந்தைகள் கப்பல் விட்டு விளையாடுவார்கள். வெள்ளம் வராமல் கப்பல் நிற்கிறது என்று வருத்தப்படுகிறார். கப்பல் கவிழ்ந்தது போல கவலைப்படுகிறார்.

ஏசு மக்களுக்காகப் பாடுபட்டார். மக்களுக்காக சிலுவையில் இன்று வரை சிலுவையில் அறையப்பட்டார். உயிரையும் விட்டார். இன்றுவரை சிலுவையில் அறையப்பட்ட நிலையிலேயே உள்ளார். ஏசுவிடம் பிரார்த்திக்கின்றனரே தவிர ஒருவரும் இறக்கிவிட முயற்சிக்கவில்லை. அவரின் நிலையை உணரவில்லை.

**சுகமளிக்கும் கூட்டம்**
**வலியோடு இருந்தார்**
**சிலுவையில் ஏசு**

ஏசுவிற்காக இரக்கப்பட்டுள்ளார். இரக்கப்படச் செய்துள்ளார். ஏசுவின் வலியை உணரச்செய்துள்ளார். ஏசுவின் பெயரால் சுகமளிக்கும் கூட்டம் நடத்துபவரையும் சாடியுள்ளார். அவர்களும் ஏசுவைக் கண்டு கொள்ளவில்லை என குற்றம் சாட்டியுள்ளார். ஆயினும் நோயுற்றவரை சுகமளிக்கும் கூட்டம் குணப்படுத்த முடியாது என்பதே உண்மை.

**நெருப்பின் தயவு**
**வளைந்து வாழ்வாகிறது**
**இரும்பு**

என்னும் ஹைக்கூக் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. நல்ல ஒரு செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. நெருப்பில்லா விட்டால் இரும்பாகவே இருந்திருக்கும். நெருப்பே வாழ்வளித்துள்ளது என்கிறார். நெருப்பைத் தண்டனையாகக் கருதாமல் தயவாகக் கருதியிருப்பது கவிஞரின் பக்குவப்பட்ட மனத்துக்குச் சான்று. குறியீடாகவும் உள்ளது. மனித வாழ்வு சிறப்படைவதற்கு அனுபவங்களே காரணம் என்கிறார்.

ஒரு கவிஞனுக்கு சமூகக் கடமைகள் உண்டு. நடக்கும் அநியாயங்களை, குற்றங்களைச் சுட்டிக்காட்ட வேண்டிய

பொறுப்பும் உண்டு. மக்களில் ஒருவராக இருந்து மக்களுக்கு உணர்த்துவது கவிஞரின் குணங்களில் ஒன்று.

**தகவல் தொடர்பு**
**ஊழலின்றி செய்தது**
**பறவையினம்**

என்னும் ஹைக்கூ அவ்வகையில் அமைந்துள்ளது. பறவை இனத்தைப் போற்றியுள்ளார். தகவல் தொடர்புத்துறையில் நடந்த ஊழலை மறைமுகமாக அம்பலப் படுத்தியுள்ளார். மக்களுக்கு ஒரு கவிஞராக ஒரு ஹைக்கூ மூலம் தகவல் தந்துள்ளார்.

கவிஞர் ஆரிசன் ஒரு நல்ல ஹைக்கூவாளர். ஹைக்கூத் தொகுப்புகளைத் தந்ததுடன் தொடர்ந்து ஹைக்கூவில் இயங்கி வருபவர். அவரின் ஹைக்கூ அனுபவம் நன்கு கைகொடுத்துள்ளது. கூடுதலாகக் குழந்தைகளின் மீது கவனம் செலுத்தியுள்ளது இத் தொகுப்பின் சிறப்பம்சமாகும். குழந்தைகள் மீதான பிரியத்தையும் ஹைக்கூ மேலான பற்றையும் இத் தொகுப்பின் வழி உறுதிப்படுத்தியுள்ளார். ஒரு சமூக ஆர்வலர் என்னும் நிலையிலிருந்தும் விலகாமல் உள்ளார். இடையிடையே பகுத்தறிவான கருத்துக்களையும் பரப்பியுள்ளார். முற்போக்குச் சிந்தனைகளையும் விரவியுள்ளார். ஹைக்கூவில் மென்மையான சொற்களையே பயன்படுத்தி தன் மனம் மென்மையானது என வெளிப்படுத்தியுள்ளார். வடிவம் ஹைக்கூக்கு ஏற்றவாறு செறிவாக உள்ளது ஹைக்கூ உலகில் ஆரிசனின் பங்கு தவிர்க்க முடியாததாகும். அவரின் ஹைக்கூ பயணம் தொடர வாழ்த்துகள்.

எழுதுங்கள் - எழுதுகிறேன் - எழுதுவோம்

என்றும் அன்புடன்
**பொன். குமார்**

21/15 புது திருச்சிக் கிளை
வடக்குத் தெரு, லைன்மேடு
சேலம்–636 006
61860: 90033 44742.

## என்னுரை

குழந்தைகளுக்கான
தமிழ் ஹைக்கூ நந்தவனத்தில்
சிரிப்பின் முகவரி
குட்டியூண்டு
ஹைக்கூ குழந்தைகள்
யாழினி எனும்
பூந்தொட்டிகளின் புன்னகையோடு
இந்தப் புதிய பூந்தொட்டியிலும்
மழலைக்கான ஹைக்கூச் செடிகள்
நட்டு வைத்துள்ளேன்.
பூவாகி ஹைக்கூ மணம் வீச வாசகர்கள் பேச
இந்த நந்தவனத்தில் இன்னும் இன்னும்...
புதிய பூந்தொட்டிகள் நிறையட்டும்.
மழலைப்பூக்கள் சிரிக்கட்டும்.

பிஞ்சுகளின் மனதோடு
– ஆரிசன்

## மைலிறகின் முத்தம்

பசியோடு குழந்தை
பால் வடியும்
ரப்பர் மரம்.

பாலை வனத்திலும்
பாலூற்று சுரக்கிறது
தாய்மை.

வறண்ட கன்னத்தில்
தேன் ரசம்
மழலை முத்தம்.

பாலைவனம்
புரட்டி எடுத்த சோலை
மழலை

சுமந்து ஈன்றும்
வளர்த்து மகிழ்கிறது
அன்னை வயல்.

தேய்பிறையில் ஜனனம்
வளர்ந்து சிரிக்கிறது
குழந்தை.

எட்டி அடிவைத்து
மகிழச்செய்தது குழந்தை
கையில் நடைவண்டி.

சிறுநீர் கழித்து
பாசத்தோடு சிரிக்கிறது
குழந்தை.

நோய்க்கு மருந்தை
சொன்னது குழந்தை
ஓடி விளையாடு.

எறும்பு கடித்தது
வலிக்கவில்லை
கிள்ளியது மழலை.

ஓயாது அழுகை
இறுதியில் சுபம்
வானவில்.

சோலைக்குள்
பூந்தொட்டி
வளர்கிறது கரு.

**நாட்கள் எண்ணப்பட்டாலும்
கம்பீரமாய் சிரிக்கிறது
நாட்காட்டியில் குழந்தை.**

**'அ'கரம் 'ஆ'காரம்
சொல்ல முடியாமல் தவித்தது
குழந்தை.**

**அழுத குழந்தை
அமைதியாய் பார்த்தது
வானவில்.**

**மலடிப்பட்டம்
போக்கிக் காட்டியது
மழலை.**

விளையாடி ரசிக்கிறது
தெருவில் மழலை
மழைநீர்.

தீயின் நாக்குகள்
சுட்டு அழித்தது
மழலைக் கிண்டல்.

'கத்தி'ப் பேசியவனுக்கு
முதல் பரிசு
வீரம்.

தாயின் கருப்பை
கிழிந்துபோக சிரிக்கிறது
உலகமயம்.

**தவம் கலைத்தன**
**கழுதைகள்**
**பசியோடு சுவரொட்டிகள்.**

**வளர்ந்து சென்று**
**உயிர் வளர்த்தது**
**வேர்.**

**எலிகள் காத்திருந்தன**
**அறுவடை வயலெங்கும்**
**வலைகள்.**

**காய்தல் தீது**
**நனைதல் நன்று**
**மீன் வலை.**

அ... ஆ... சொன்னது
குழந்தை வாயில் முத்தமிட்டது
வானம்.

அம்மாவை உச்சரித்து
கருப்பையைப் புனிதமாக்கியது
குழந்தை.

இடியின் அவஸ்தை
சொல்லமுடியாமல் அழுதது
வானம்.

கப்பல் கவிழ்ந்தது
மகிழ்ச்சியில் குழந்தை
மழை வெள்ளம்.

வானத்து இடிமுழக்கம்
ஒன்று சேர்ந்து கேட்டன
திசைகள்.

மத்தாப்பு ஒளி
நனைந்தது மழலை
தீபாவளி.

வற்றாத ஜீவநதியாய்
வாழ்ந்து கொண்டிருக்கிறது
நாக்கு.

முள் தைத்தும்
வலிக்காமல் ஓடுகிறது
நதி.

வீதியில் கொளுத்திப் போட்டனர்
ஊர் முழுக்க
புரளி.

மழலை ஜனனம்
பெற்றோர்களாயினர்
தம்பதிகள்.

விட்டுக் கொடுத்து
விளையாடச் சொல்கிறது
குழந்தை வானம்.

வெள்ளமின்
தெருவில் நிற்கிறது
காகிதக் கப்பல்.

புகை மூட்டம்
கொட்டாவி விட்டது
அருவி.

உச்சரிக்க முடியாமல்
தோற்றுப் போகிறது
இடி

தரையில்
அழகு ஓவியம்
கோலம்.

மலைகளை
ஆக்கிரமித்திருக்கிறது
பனி மூட்டம்.

**தூ வானத்தின்**
**தூறல் உணரமுடிகிறது**
**கிளிப்பேச்சு.**

**காவியக் கற்பனை**
**ஊற்றெடுத்து உருவானது**
**மழலைக் கரு.**

**மொழி பெயர்க்கத் தெரியாமல்**
**தவிக்கிறது குழந்தை**
**கனவு.**

**திரிக்க முடியாமல்**
**கொளுத்தியது குழந்தை**
**தீபாவளிக் கயிறு.**

தரையில் நின்று
பூ மழை பொழிகிறது
புஷ்வானம்.

பாட்டிக்குக்
கதைசொல்லியது குழந்தை
கா... கா...

கவலை மறந்து
கவிதை தீட்டினான்
தோட்டத்தில் மின்மினி.

வறண்ட பூமி
வேரின் அழுகையில்
துளிர்த்தது செடி.

புளிப்பைத் தின்று
இனித்தே இருந்தாள்
கர்ப்ப ஸ்திரி.

எட்டி நின்று கையசைத்தால்
கிட்ட வந்து சிரிக்கும்
மழலை.

சுமக்கும் போது
வலிக்கவில்லை
மழலை.

சுகமளிக்கும் கூட்டம்
வலியோடு இருந்தார்
சிலுவையில் ஏசு.

பார்வைப் பசிக்கு
தேவையாயிருக்கிறது
இயற்கை.

வெறுமையாய் பறக்கிறது
விரைவுப் பேருந்து
தங்க நாற்கரசாலை.

கன்னிப்பேச்சு
உணர முடிகிறது
தேன்சுவை.

தாயின் தாலாட்டில்
தூங்கிப் போனது
ஊஞ்சல்.

அன்பைக் காட்டுகிறது
அப்பா அம்மா விளையாட்டில்
குழந்தை.

நெருப்பின் தயவு
வளைந்து வாழ்வாகிறது
இரும்பு.

படித்தும்
தவிக்கிறான்
பசி.

தகவல் தொடர்பு
ஊழலின்றி செய்தது
பறவையினம்.

**உதிர்ந்த சிறகு**
**பறந்து சொல்கிறது**
**உயிர்வலி.**

**பறவைக் கூடின்றி**
**கலையிழந்து போனது**
**கோபுரம்.**

**கா விட்டு அழுத குழந்தை**
**பசிக்கு உண்டது**
**எதிரில் காகம்.**

**நீருக்குள் உணவு**
**மோப்பத்தோடு பறக்கிறது**
**மீன்கொத்தி.**

மழை நனைத்தும்
பாரமற்ற பயணம்
பறவை.

கிளையில் பாம்பு
பொந்துக்குள் விளையாடுகிறது
குருவிக் குஞ்சு.

பூக்களின் வாசம்
பறந்தது
பசி.

வேர்தொட்டு
விழுதுகள் மரியாதை
பறவைக் கூடு.

உதிர்ந்தும்
உன்னதமாய் முளைக்கிறது
சிறகு.

கூட்டாஞ்சோறு ஊட்டி
மகிழ்ந்தது
'புள்'ளினம்.

பறவைக்குத் தெரியும்
கூடுகளின் வரலாறு
கற்காலம்.

மீசை சுழற்றி
மகிழ்ச்சி தெரிவித்தது
கரப்பான் பூச்சி.

**வீசி எறிந்த கல்லில்
தெரிகிறது சலனஅடுக்குகள்
நீர்ப்பரப்பு.**

**தோள்மீது தூங்கும்
குழந்தைக்குத் தெரிகிறது
அம்மாவின் தாலாட்டு.**

**குழந்தைகள் விளையாட்டு
சலிப்பின்றி ஒத்துழைக்கிறது
பொம்மை.**

**தூங்கும் மழலை
இசையோடு ஆடியது
தூளி.**

**வாழ்வியல் ஞாபகத்தோடு
நின்று கொண்டிருக்கின்றன
மலைகள்.**

**பொம்மைக் கல்யாணம்
நடத்தி வாழ்த்துகிறது
குழந்தை.**

**இறுகப் பற்றிக் கொண்டது
குழந்தையின் கையில்
எழுதுகோல்.**

**இளநீர் சுவை
பருகிய உணர்வு
மழலைப் பேச்சு.**

கன்னல் சாறும்
கசக்கிறது...
மழலையற்ற வீடு.

வெளியூரில் குழந்தைகள்
தூங்காமல் தவிக்கின்றன
பொம்மைகள்.

பொருத்தம் பார்த்தே கல்யாணம்
பட்டம் வாங்கினாள்
மலடி.

விரல் சூப்பி
பசியாறியது மழலை
அலுவலில் தாய்

**பழி தீர்க்க**
**பதுங்கியிருக்கின்றன**
**பந்தம்.**

**தோட்டத்தில் பறவைகள்**
**சைகையால் அழைக்கிறது**
**குழந்தை.**

**உலை கொதிக்காமலே**
**பொங்கி சாப்பிட்டனர் குழந்தைகள்**
**சொப்பு விளையாட்டு.**

**வாழ்பவர்கள்**
**வணங்கும் கோயில்**
**தாயின் கருவறை.**

பத்தில் பிறந்து
பதினெட்டில் அடி வைத்தான்
துவங்கியது பாரதப்போர்.

எட்டி நடக்கிறது
விழுந்து எழுகிறது
ஊக்கத்தோடு குழந்தை.

விளம்பரத்தில் வராமலே
வீர்யமாய் வளர்ந்தது மழலை
தாய்ப்பால்.

சேனல் மாற்றினால்
அடம் பிடிக்கிறது
'சுட்டி' குழந்தை

விழுந்து அழுகிறது
தொழுது எழுகிறது
மழை.

பாரத தேசம்
பழம்பெரும் தேசம்
ஊழல் பெருச்சாலிகள்.

மொழியைப்
பிழையின்றி பேசுகிறது
கிளி.

உள்ளது உள்ளபடியே
உணரச் செய்கிறது
குழந்தை.

சிறகு முளைத்து
பறந்தது குழந்தை
பள்ளிக்கூடம்.

மணி அடித்ததும்
வரவில்லை
சாப்பாட்டு வண்டி.

ஆயா போடுவதையே
ஆசிரியரும் போடுகிறார்
முட்டை.

மணியடித்ததும்
க்யூவில் நின்றது
சத்துணவு.

நடத்திய பாடத்தை
உன்னிப்பாய்க் கேட்டது
வகுப்பறை.

நெருக்கி உட்கார்ந்து
பயணிக்கிறது
ஆட்டோ கல்வி.

வலிமை தான் கல்வி
கற்றுக் கொடுத்தது
பிரம்பு.

கட்டணம் இல்லை
போராட்டமில்லை
அரசு ஆரம்பக் கல்வி.

உற்சாகமாய் வண்டிகள்
வறண்ட கதை சொன்னது ஆறுகள்
மணல் சுரண்டல்.

சமாதானமின்றி போடுது
ஆட்டம் பாட்டம்
குழந்தை விளையாட்டு

ஊஞ்சலில் அம்மா
தாலாட்ட முயல்கிறது
குழந்தை.

குற்றம் தவிர்த்து
சுற்றம் சேர்த்தது
குழந்தை.

மலம் கழித்ததால்
புனிதம் கெடவில்லை
கோவிலில் குழந்தை.

வீட்டுக்குள்ளும்
வசித்திருக்கிறது
குருவிக்கூடு.

பாம்பின் நிழல்
பாதுகாப்பாய் தூங்கியது
ஆமை.

கரை தொட்டும்
நிற்க முடியவில்லை
கடலலை.

முள்ளோடு
வாழ்க்கை
மீன்.

உப்புமூட்டை
தூக்கச் சொல்லி அழுகிறது
குழந்தை.

'அ' எழுதியது மழலை
பிஞ்சுக்கையில் முத்தமிட்டாள்
அன்னை.

பிஞ்சுக்கரங்கள்
மத்தளம் வாசிக்கிறது
தாயின் முகம்.

**எலிப்பொறியில்
அடங்கிப் போகிறது
கணினி வாழ்க்கை.**

**கை குலுக்கி
உற்பத்தி செய்யும் மின்சாரம்
காற்றாலை.**

**சொட்டும் ரத்தத்தில்
குளிர் காய்ந்தே இருக்கிறது
ஜாதி அரசியல்.**

**சுற்றி வளைத்து
இழுக்கிறது காற்றாலை
மின் உற்பத்தி.**

காற்றைக் களவாடி
பயணிக்கிறது மதத்தேர்
புழுக்கத்தோடு மக்கள்.

இழையில் மின்னியது
குடியிருக்கும் வீடு
சிலந்தி.

கூரை மீது பசுமையாய்
படர்ந்து செல்கிறது
தாயின் உறவு.

ஒளியின் விட்டத்தில்
சுற்றிச் சுழல்கிறது
சங்கு சக்கரம்.

வாழ்வின் வெற்றியை
செதுக்கியது
சேமிப்பு.

★★★ ★★★ ★★★ ★★★ ★★★

**உங்கள் கருத்துக்காக. . .**

ஐக்கூக் கவிதைகள் மக்கள் தொகையைப் போலப் பெருகிவிட்டன. அவ்வடிவத்தையும், உட்பொருளையும் கைவரப்பெற்றவர்கள் தொகை குறைவே. அதனால் இப்பொழுது தைக்கும் அளவிற்கு ஐக்கூ வடிவம் சிதைந்து கொண்டு வருகிறதோ என்ற ஐயம் எழுகிறது. இருப்பினும் சிலர் அதன் செவ்வி தலைப்படுபவர்களாக இருந்து அவ்வடிவத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர் கவிஞர் ஆரிசன்.

**– இராம. குருநாதன்**

கவிஞர் ஆரிசனின் முதல் மூன்று தொகுப்புகளைக் காட்டிலும் இத்தொகுப்பு வித்தியாசமானது. எண்பது சதவீதம் குழந்தைகளைப் பற்றிய ஐக்கூக்களைக் கொண்டது இத்தொகுப்பு. இக்கவிதைகளைப் படிப்போர் தங்கள் வீட்டுக் குழந்தைகள் செய்த செயல்பாடுகளையும், குறும்புகளையும் உணர நேரலாம்.

**– மித்ரா**

கவிஞர் ஆரிசன் ஒரு நல்ல ஐக்கூவாளர். ஐக்கூத் தொகுப்புகளைத் தந்ததுடன் தொடர்ந்து ஐக்கூவில் இயங்கி வருபவர். அவரின் ஐக்கூ அனுபவம் நன்கு கைகொடுத்துள்ளது. கூடுதலாகக் குழந்தைகளின் மீது கவனம் செலுத்தியுள்ளது இத் தொகுப்பின் சிறப்பம்சமாகும். குழந்தைகள் மீதான பிரியத்தையும் ஐக்கூ மேலான பற்றையும் இத் தொகுப்பின் வழி உறுதிப்படுத்தியுள்ளார். ஒரு சமூக ஆர்வலர் என்னும் நிலையிலிருந்தும் விலகாமல் உள்ளார்.

**– பொன். குமார்**

**ஆசா பதிப்பகம்**
கீழ்க்கொடுங்காலூர்
வந்தவாசி - 604 403
கைப்பேசி : 94423 11118

